'திருமயிலாடுதுறை' என்ற பெயர் வைக்க வேண்டுமென்று உறுதி சொல்லி யிருக்கிறார்கள். அந்தப் பெயரைச் சூட்டுவதற்கு இனிமேலாவது அரசு செயல் படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 'மாயூரம்' என்ற பெயர் புகைவண்டி நிலையத்தில் மாற்றப்பட்டால்தான் பொருத்தமாக இருக்கும். இதைப்பற்றி நாம் மத்திய அரசுக்கு எழுதி, அவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டால் அப்படிச் செய்யலாம். இப்போது அங்கே எந்த மயிலும் ஆடிக்கொண்டிருக்கவில்லை.

டாக்டர் ச. அ. சின்னராசு: தலைவர் அவர்களே, ஜாதியின் அடிப்படையில் இருக்கின்ற ஊர்களின் பெயர்களை மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகளுக்கான நேரம் முடிவுறுவதால், வினாக்கள்-விடைகளுக்கான நேரத்தை நீட்டிக்க பேரவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

தமிழ் நாடு பால், பால் பொருள்கள் உற்பத்தி, விற்பனைச் சங்கம்.

*515 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) "தமிழ்நாடு மில்க் அண்ட் மில்க் பிராடக்ட்ஸ் மேனுபேக்சார்ஸ் அண்ட் டீலர்ஸ் அசோசியேஷன், ஊத்துக்குளி" இடமிருந்து விற்பனை வரி குறித்து விண்ணப்பம் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(ஆ) வெண்ணெய் எடுத்த பாலிலிருந்து தயாரிக்கப்படும் தயிருக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

மனித முடியை உரமாகப் பயன்படுத்தல்

*516 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித உரோமத்தை உரமாகப் பயன்படுத்தும் திட்டத்தை அரசு ஆய்வு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு பெ. மலேச்சாமி : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மக்கள் கோயில்களுக்குச் சென்று மொட்டை அடித்துக்கொள்கிறார்கள். பெண்கள் முடிகள் நல்ல உரமாக இருப்பதால், அதை நிலத்தில் போட்டு உரமாகப் பயன் படுத்தலாம் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். இதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முடிகளைக் கொண்டு சவுரிகளாகவும், டோப்பாக்களாகவும் செய்து நல்ல முறையில் விற்பனை செய்கிறார்கள். இந்த முடிகளில் அதிகம் உரம் இருப்பதாகச் சொன்னார்கள். உரம் இருக்கிறது. ஆனால் 1 முதல் 2 சதவீதம் வரைதான் நைட்ரஜன் இருக்கிறது. ஆகவே, இதை உரமாக உபயோகிக்கின்ற எண்ணம் இல்லை.

State Transport buses plying in Mylapore area

* 517 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether a number of buses plying in Mylapore area were diverted from their normal routes during the first half of April 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கோவில் ஆண்டு பிரம்மோத்சவத் திருவிழாவின் போது 1—4—1971 முதல் 10—4—1971 வரையில் 'லஸ்' முதல் மந்தைவெளி அஞ்சல் நிலையம் வரையுள்ள இராமகிருஷ்ணர் மடம் சாலையில் பேருந்து போக்குவரத்துக்குக் காவலர்கள் தடை விதித்ததால் பத்தொன்பது வழித்தடப் பேருந்துகளை வேறுவழித் தடங்களில் திருப்பி விட வேண்டிய தாயிற்று. இவ்வாறு வேறு வழித்தடங்களில் பேருந்துகளைத் திருப்பிவிடுவது ஆண்டுதோறும் நடைபெறுகிற ஒரு நிகழ்ச்சியே.

Complaint book in State Transport Buses

* 518 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state whether suggestions and complaints books are readily made available for the use of the passengers in all State Express Buses?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

DR. H. V. HANDE : Sir, is it a fact that complaints have been received that there are no complaint books in some of the buses and if so, what is the action taken by the Government to see that such complaints are not received hereafter?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பேருந்துக்கும், நெடுந்தொலைவு பேருந்துக்கும் புகார் புத்தகம் வைக்கப் பட்டுள்ளது. புகார் புத்தகம் வைக்கப்படவில்லையென்கிற எந்தப் புகாரும் வரவில்லை. இந்தப் புகார்களை நானே நேரில் பார்த்து ஆய்வு செய்கிறேன். அதில் நல்ல ஆலோசனைகளைக்கூட எடுத்துச் சொல்கிறார்கள்.